[1972 டிசம்பர் 16

Under rule 176 (1) of the Council Rules, I have nominated Thiru K. Rajaram to be the Chairman of the Committee on Government Assurances.

u P. 249. @ THIRU V. ISVARMURTI : "The explosion of detonators in the Cement Factory at Mudukkarai. Coimbatore District on December 5 resulting in the death of one person and injury to 24 persons and causing damage to houses in the locality, on account of which there is panic among the local residents as well as the passengers passing through the National Highway near the Factory.

Thiru Y. Venkateswara Dikshidhar- அண்மையில் தமிழகத் கொடுமையாக தாக்கிய புயலினாலும், மழையினாலும் ஏற்பட்ட உயிர் சேதம், பொருட்சேதம் இவைகளுக்கு நிவாரணம் அளிப்பதைப் பற்றி".

3. அரசினர் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசாங்க அலுவல் நடத்துதல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற விதிகளின் 23(1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு இந்த அவை, 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசாங்க அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23(1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு இந்த அவை, 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசாங்க அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது:"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.